Department of Education,Sabaragamuwa Province/ Weekly School Department of Education,Sabaragamuwa Province/ Weekly School Department of Education,Sabaragamuwa Province/ Weekly School

மாகாண கல்வித் திணைக்களம் - வாராந்தப் பாடசாலை

பாடம்: தமிழ் இலக்கிய நயம்

வாரம் - 04

தரம்: 11

ஆக்கம்: ஆசிரியை T.பேபி ஷாலினி
கே/ சாந்த மரியாள் தமிழ் மகா வித்தியாலயம்

**பாடலை வாசித்து கீழுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

அயலும் புடையும் வாழ வேண்டும்
அன்னமும் சுற்றமும் வாழ வேண்டும்
ஆச்சியும் அப்பனும் வாழ வேண்டும்
அம்மாவும் மாமியும் வாழ வேண்டும்

அரிசிப் பொதியோடும் வந்தீரோ தம்பி
அரிசி மலைநாடும் கண்டீரோ தம்பி

நெல்லுப் பொதியோடும் வந்தீரோ தம்பி
நெல்லு மலைநாடும் கண்டீரோ தம்பி

மஞ்சள் பொதியோடும் வந்தீரோ தம்பி
மஞ்சள் மலைநாடும் கண்டீரோ தம்பி

மிளகுப் பொதியோடும் வந்தீரோ தம்பி
மிளகு மலைநாடும் கண்டீரோ தம்பி

உள்ளிப் பொதியோடும் வந்தீரோ தம்பி
உள்ளி மலைநாடும் கண்டீரோ தம்பி

இஞ்சிப் பொதியோடும் வந்தீரோ தம்பி
இஞ்சி மலைநாடும் கண்டீரோ தம்பி

உப்புப் பொதியோடும் வந்தீரோ தம்பி
உப்பு மலைநாடும் கண்டீரோ தம்பி

காசுப் பொதியோடும் வந்தீரோ தம்பி
காசு மலைநாடும் கண்டீரோ தம்பி

வேந்தர்க்கு வேந்தராய் வந்தீரோ தம்பி
வேந்தர் மணி கண்டீரோ தம்பி

கோச்சி வாழ கொப்பர் வாழ
பேத்தி வாழ பேரன் வாழ

பூட்டி வாழ பூட்டன் வாழ
கொம்மான் வாழ மாமி வாழ

குஞ்சியாச்சி வாழ குஞ்சியப்பு வாழ
பெரியாச்சி வாழ பொரிப்பு வாழ

ஊர் வாழ தேசம் வாழ
குருவுக்கும் சிவனுக்கும்
நல்ல பிள்ளையாய் இருந்து வாழ்க

1. குழந்தை எவ்வாறெல்லாம் வாழ வேண்டும் என மருந்துவீச்சி வாழ்த்துகின்றான்?
2. மருந்துவீச்சியின் பரந்த மனப்பாங்கு எவ்வாறு புலப்படுத்தப்படுகின்றது?
3. பாடலில் கிராமிய மண் வாசனை வெளிப்படுமாற்றினை எடுத்துரைக்க?
4. குருவுக்கும் சிவனுக்கும் நல்ல பிள்ளையாய் இருந்து வாழ்க... எனும் அடிகள் உணர்த்தும் கருத்து யாது?